**செ. கு. எண்**: 54 **நாள்**:06/02/2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 6.2.2012

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், கரியமங்கலம் மதுரா கண்டாக்கப்பாளையம் கிராமத்தில் 29.1.2012 அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது திருவண்ணாமலையிலிருந்து ஊத்தங்கரை சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த பொரசப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. அண்ணாமலை என்பவரின் மகன் சுரேஷ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், குப்பூர் கிராமம், தேசிய நெடுஞ்சாலையில் 4.2.2012 அன்று தின்னப்பட்டியிலிருந்து சேலம் செல்லும் நகர பேருந்து, பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை ஏற்றிச் செல்ல நின்று கொண்டிருந்த போது, பின்புறம் லாரி மோதியதில் பேருந்தில் ஏறுவதற்காக நின்று கொண்டிருந்த பள்ளப்பட்டி தரப்பு காக்கையனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்லப்பன் என்பவரின் மகன் சித்தையன், கோட்டகவுண்டன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. மயில்வாகனன் என்பவரின் மகன் முருகேசன் மற்றும் ஒரு பெண் பேருந்தின் சக்கரத்தில் சிக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேலும், இச்சாலை விபத்தில் ஆறு பேர் படுகாயம் அடைந்தனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், சேலம் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சாலை விபத்துகளில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவங்களில் காலமானவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாயும், சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், குப்பூர் கிராமம், தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**